Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Special Issue - 1, November 2022** **E-ISSN: 2583-0481**

# Ideological Visionaries of Inqulob's Poems

**S. Vijay**, Assistant Professor of Tamil, Arul Anandar College, Karumathur, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: http://orcid.org/0000-0001-6737-6529**
**DOI: 10.5281/zenodo.7313036**

## Abstract

*Literature is set not only on the voice of the mind. It is a movement that reverberates in all directions. The role of literature in the life structure of Tamils from primitive common society to dominant society is immense. The internal (content) and external (structural) variations that literature has achieved over time are closely related to social changes. Starting from Sangam literature made the literature of the natural life of ethnic groups, created new concepts such as state social sacraments, morals of land-owning society, and canons of capitalist society, made traditions contrary to knowledge and paved the way for the domination and exploitation of the working people, and from time to time, the literatures that have come under the control of the masses have seen opposition. Throughout Indian history, the working people have been placed on the edge of social construction by various social structures and have lost their determination to existence. As a result of scientific alternative ideologies that gained vigour in the twentieth school, changes took place in all social and economic conditions. Tamil literature underwent structural and intellectual changes. The twentieth century can be considered a period of recovery for the working people in the canter of art and literature as intellectuals and innovators in the Sangam literature after undergoing a great setback in the Middle Ages. Thus, by studying the debates and creations of the progressive and reformist intellectuals who popularized literature, hypotheses for social change can be arrived at. Also, through literature, people who work to break the old traditions and sacred constructions and rebuild their society will gain power.*

**Keywords:** Ideological, Visionary, Inqulob's, Poems.

## References

[1] *I will call every grass by name.* Inculab 2017, Annam Publishing House, Thanjavur.
[2] *Trends in Modern Tamil Poetry*. Karikalan 2005, Maruta Publishing House, Puducherry.
[3] *Marxism in New Poems*. A. Sekannathan 1983, Manivaskar Publishing House, Chennai.
[4] *Poetry is the soul*, body and soul. K. P. Aravanan 1977, Bari Station, Chennai.
[5] *Sociology and Literature*. K. Kailasapathy 1979, New Century Books, Chennai.
[6] *Art Literature A Philosophical Perspective*. Gnani 1975, Velvi Publications, Coimbatore.
[7] *Principles of Marxist Sociology*. N. Vanamamalai. New Century Book House, Chennai.
[8] *Pudukavitha Pudupparvai*. Bala 1999, Akaram Publication, Chennai.
[9] *Literary Movement in Pudukavitha*. Ira Sampath. Uma Publishing House, Puducherry.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# இன்குலாப் கவிதைகளின் கருத்தியல் பார்வையாளர்கள்

**சி. விஜய்**, உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர், மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: http://orcid.org/0000-0001-6737-6529**
**DOI: 10.5281/zenodo.7313036**

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் என்பது மனதின் குரல் மட்டுமல்ல. இது எல்லா திசைகளிலும் எதிரொலிக்கும் ஒரு இயக்கம். ஆதிகாலப் பொதுச் சமூகம் முதல் ஆதிக்கச் சமூகம் வரை தமிழர்களின் வாழ்க்கைக் கட்டமைப்பில் இலக்கியத்தின் பங்கு மகத்தானது. காலப்போக்கில் இலக்கியம் அடைந்த அக (உள்ளடக்கம்) மற்றும் வெளிப்புற (கட்டமைப்பு) மாறுபாடுகள் சமூக மாற்றங்களுடன் நெருங்கிய தொடர்புடையவை. சங்க இலக்கியங்களிலிருந்து தொடங்கி, இனக்குழுக்களின் இயல்பு வாழ்க்கையை இலக்கியமாக்கி, அரசு சமூகச் சடங்குகள், நிலவுடைமைச் சமூகத்தின் ஒழுக்கம், முதலாளித்துவச் சமூகத்தின் நியதிகள் எனப் புதிய கருத்துகளை உருவாக்கி, அறிவுக்கு முரணான மரபுகளை உருவாக்கி, ஆதிக்கத்துக்கும் சுரண்டலுக்கும் வழி வகுத்தவர்கள். உழைக்கும் மக்களின், மற்றும் காலத்துக்குக் காலம், வெகுஜனங்களின் கட்டுப்பாட்டில் வந்த இலக்கியங்கள் எதிர்ப்பைக் கண்டன. இந்திய வரலாறு முழுவதும், உழைக்கும் மக்கள் பல்வேறு சமூகக் கட்டமைப்புகளால் சமூகக் கட்டுமானத்தின் விளிம்பில் வைக்கப்பட்டு, தங்கள் இருப்பு நிர்ணயங்களை இழந்துள்ளனர். இலக்கியத்தை பிரபலப்படுத்திய முற்போக்கு மற்றும் சீர்திருத்தவாத அறிவு ஜீவிகளின் விவாதங்கள் மற்றும் படைப்புகளைப் படிப்பதன் மூலம், சமூக மாற்றத்திற்கான கருதுகோள்களை அடைய முடியும். அவ்வகையில் தமிழ்க் கவிதை இலக்கியத் தளத்தில் உழைக்கும் மக்களின் குரலாக ஒலித்த கவிஞர் இன்குலாப் கவிதைகள் மூலம் தமிழ்ச் சமுதாய மக்களின் நிலையையும் கருத்துகளையும் அறிந்து கொள்வது அவசியமாகிறது. மேலும், இலக்கியத்தின் வாயிலாக பழமரபுகள் மற்றும் புனிதக் கட்டுமானங்களை உடைத்து, உழைக்கும் மக்களும் விளிம்புநிலை மக்களும் தமக்கான அதிகாரத்தைப் பெறுகின்ற கருத்தியல் வழிகாட்டுதல்களைப் பெறவியலும்.*

**குறிப்புச் சொற்கள்**: கருத்தியல், தொலைநோக்கு, இன்குலோப், கவிதைகள்.

**முன்னுரை**

கவிதை என்பது அனுபவ அவதானிப்புகளின் ஊடாக மனச்சலனத்தின் நுண்தளத்தில் கருக்கொண்டு, வெளிப்படும் தனித்துவமான ஆற்றல்களைக்கொண்ட கலை வடிவமாகும். சமூகத் தளங்களோடும் தனிமனித எண்ணப் போக்குகளோடும் அனுபவமாகி, மொழிவழி

வெளிப்படும் கவிதைக்குள் கவிஞனின் அக, புற வாழ்க்கைச் செயல்பாடுகளும், கருத்தியல் நிலைப்பாடுகளும் இயக்கம் கொள்கின்றன. இருபதாம் நூற்றாண்டில் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தமிழ் இலக்கியத்தளம் ஓர் சுதந்திரவெளியினை அடைந்ததின் வாயிலாக, உழைக்கும் மக்கள் உரிமைகளுக்காகக் குரலெழுப்பும் வீரியமிக்க கருத்தியல்சார் மொழிப்புலத்தைப் பெற்றிருக்கின்றனர். இலக்கியப் படைப்புத் தளங்களில் தமிழ்ச்சமூகத்தின் அறிவியல், அரசியல் கருத்தியக்கச் சாரங்களை வெகுவாகக் காண முடிகிறது. காலத்தினை அறிவியல் ரீதியிலான அணுகுமுறைகளின் வாயிலாக முன்னை வரலாற்றோடும் பின்னை இலக்குகளோடும் பதியச்செய்து கருத்துக்கள் ஒன்றையொன்று வெட்டியும் ஒட்டியும் பயணிக்கின்ற நவீனக் கவிதைகளின் உள்ளடக்கத்தினுள் இருபதின் தமிழ்ச்சமூகக் கருத்தியக்கங்கள் காட்சிப்படுகின்றன. காலந்தோறும் கவிதை காட்டும் சமூக மதிப்பீடுகளைக் கவனத்தில் கொண்டு, சமூகத்தின் இயக்கத் தன்மைகளை நுணுகி ஆய்ந்தறிவதன் வாயிலாக மக்கட்குழுவின் பொதுக்கட்டமைப்பின் வினையூக்கிகளைப் புரிந்துகொள்ள முடியும். அவ்வாறாக பாவலர் இன்குலாப் மொழி வழியாக இருபதாம் நூற்றாண்டின் சமூகத்தின் விடுதலைக் கருத்தியக்கத்தை அறியும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

**இருபதாம் நூற்றாண்டில் கருத்தியல் இயக்கங்கள்**

காலனிய ஆதிக்கத்திலிருந்து போராடிவிடுபட்டுமக்களாட்சிஉருவாக்கத்திற்குபின்பும் உழைக்கும் மக்கள் மீண்டும் இந்தியாவின் புராண மயப்பட்ட சாதியப் படிநிலைச் சமூகத்தில் இருந்தும், நிலவுடைமையாளர்களிடம் இருந்தும் விடுபடப் போராட வேண்டிய கட்டாயத்திலேயே இருந்தனர். சாதிய, வர்க்க அடிமைத்தனக் கட்டமைப்புகளுக்குள் இயங்கும் படிநிலைச் சமூக அமைப்பைச் சீர்படுத்தும் நோக்குடன் பல்வேறு மாற்றுக் கருத்துருக்கள் காலனியத்திலேயேக் கருக்கொண்டுவிட்டன. என்றாலும் இருபதாம் நூற்றாண்டில் தான் விடுதலைக் கருத்தியல்கள் வீரியத்துடன் மக்கள் மயப்பட்டன. குறிப்பாக, ரஷ்யப் புரட்சி (1907) வெற்றிக்குப்பின் உலகளாவியப் பொருளியச் சமநிலைக்கு வழிகோலும் காரல் மார்க்சின் பொருளியச் சிந்தனையுடன் இந்தியாவில் இயக்கங்கண்ட பொதுவுடைமைக் கருத்தியலும், மரபார்ந்தச் சாதியக் கட்டமைப்பினை எதிர்த்துப் போராடிய அம்பேத்கரின் தலித்தியச் சிந்தனையும், சமூகத்தின் ஆதிக்க வேர்களைப் பாதுகாத்து கிளைபரப்பி நின்ற சமயக் கட்டுமானங்களின் மீது வலுவான எதிரியக்கம் கண்ட பெரியாரின் திராவிடச் சிந்தனையும் வலுவாகக் களம் கண்டன.

மார்க்சியப் பொதுவுடைமைக் கருத்தியலோடு இந்தியாவில் இயக்கங்கண்ட பொதுவுடைமைக் கட்சியும், வலதுசாரி இந்துத்துவப் பிராமணியக் கருத்தியலோடு ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கமும் இயக்கங்கண்ட 1925-ம் ஆண்டு இந்தியக் கருத்தியல் தளத்தில் குறிப்பிடத்தக்கதாகும். எழுபதுகளுக்குப்பின் முதலாளிய நாடுகளிடையேயானச் சந்தைப் பிடிப்புப் போட்டிகளும், இந்தியாவின் உலகமய ஒப்பந்தங்களும், உள்நாட்டு அரசியல் குழப்பங்களும், அரசின் பொருளியத் தெளிவற்ற நிலையாலும் அனைத்துப் பொருளாதார

மட்டங்களிலும் கடும் தாக்கங்களை ஏற்படுத்தின. 1991 சூலை 24 இந்திய அரசின் தனியார் முதலீட்டுக்கான கட்டற்ற வர்த்தக அனுமதி அறிவிப்புக்குப்பின் மீண்டும் முதலாளியத்தின் பிடியில் இந்தியா வலுவாகச் சிக்குண்டது.

காலனியக் கொடுமைகளை முன்பே உணர்ந்திருந்ததாலும், மரபார்ந்த புராணப் படிநிலைச் சமூகக் கட்டமைப்பின் அடிமைத்தன வடிவங்களை நன்கு உணர்ந்திருந்ததாலும் அசமத்துவத்தை எதிர்த்து இந்தியா முழுக்க நிகழ்ந்த எதிரெழுச்சியால் பிராந்தியக் கட்சிகளின் தோற்றங்களும் நிகழ்ந்தன. தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் பெரியாரின் திராவிடச் சிந்தனை அரசியல் இயக்கமாகி, அதிகாரத்தை நோக்கித் தலைப்பட்டு, சமத்துவச் சமுதாயத்துக்கான முன்னெடுப்பாக சமூகநீதிக் கருத்தியலுடன்மக்களை அரசியல்படுத்தியது. இடது, சனநாயக முற்போக்குக் கருத்தியல்கள் மக்களை அணிதிரட்டி வகுப்புவாரி பிரதிநிதித்துவம், இடஒதுக்கீடு, சமயச்சார்பின்மை, பன்முகப் பண்பாட்டு ஓர்மைப்பாடு என மக்களாட்சியின் மாண்புகள் முன்னெடுக்கப்பட்டன. மரபார்ந்த, பழமைவாதச் சிந்தனையுடன் சாதிய, சமய மேலாதிக்கத்தின் வழியாகப் பொருளிய மேலாதிக்கத்தை நிலைப்படுத்தும் முயற்சிகளும் தொடர்ந்து வந்தன. அதிகாரத்தின் உயர்மட்டங்களில் நிலைநிறுத்திக் கொண்ட பிராமணிய, முதலாளியக் கூறுகள் சனநாயகத்தை தங்களுக்குச் சாதமான அமைப்பாக மாற்றியிருந்தன.

**கருத்தியல்சார் தமிழ்க்கவிதை இயக்கத்தளம்**

தமிழ்நாட்டில் வர்க்க, பொருளாதார, சுயமரியாதை சமூகச் சமநிலையுடன் இயங்கிய விடுதலைக் கருத்தியல்களுக்கு உழைக்கும் மக்களிடம் கிடைத்த வரவேற்பும், மக்களின் பங்கேற்பும், குறைந்தபட்ச அரசதிகாரப் பிரதிநிதித்துவமும் நவீன இலக்கியத்தின் போக்கை மாற்றியமைத்தன. மக்களினங்களின் சுயாதீனச் சிந்தனைக்கும் கருத்தரசியல் தளங்களே வழிகோலின. மொழி, வழிபாடு, கலை, உள்ளிட்ட வாழ்வியல் பண்பாட்டுப் பன்முகத் தன்மை உள்ளிட்ட மக்களாட்சி மாண்புகள் சிதைக்கப்பட்டன. ஒற்றை மயத்தை நோக்கிய அரசதிகாரப்போக்கை மக்களாட்சியை நோக்கி மய்யங்கொள்ளச் செய்ததில் இடதுசாரி, தலித்திய, திராவிடக் கருத்தியல் புலத்திற்கு பெரும் பங்குண்டு. என்றாலும், இவ்வியக்கங்கள் அரசியல் ஓர்மையுடன் அணியமாக இயலாமையினாலும் அதிகாரப் பங்கேற்பில் அதிக கவனம் கொள்ளாமையினாலும் காங்கிரஸ் பேரியக்கத்தினுள் மய்யங்கொண்டு மறைந்திருந்த முதலாளியச் சார்புடைய, பிற்போக்கான மனுவாதக் கருத்துருக்கள் அரசியல் வலுப்பெற்று மக்களாட்சியைத் தமக்கேற்பக் கட்டமைத்த காலகட்டத்தில் முற்போக்குக் கருத்தியல் இயக்கங்களால்இலக்கியங்கள் சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரக் கருவிகளாக மாற்றம் கண்டன.

**இந்தியாவில் முதலாளியம்**

இந்தியாவில் முதலாளியம் என்பது சனாதனிய முதலாளியமாகவே அமைந்திருக்கிறது. முதலாளியம் எப்போதும் பொருளிய ஆதிக்க நோக்கில்தான் நடைமுறையில் இயங்குகிறது. என்றாலும், இந்தியாவில் சாதியப் படிநிலைச் சமூகமாகப் புராண, மத நம்பிக்கைகளோடு இறுகக் கட்டப்பட்டு இருந்தன. இந்தியச் சமூகத்தின் பழமையான மனுவாத வாழ்க்கை

முறையின் சார்பிலேயே இந்தியரவில் இந்து, கிறித்தவ, இசுலாமிய மத உணர்வுகள் நிரம்பியிருந்தன. இந்தியாவின் சிக்கலான பொருளியல் அசமத்துவம் முதலாளியக் கருத்தியலாருக்கு மட்டுமன்றி பொதுவுடைமை இயக்கக் கருத்தியலாருக்கும் எளிதில் புலப்பட்டிருக்கவில்லை. இந்தியாவின் மரபார்ந்த புராணக் கட்டுமானங்களுக்குள் அசமத்துவக் கூறுகள் பிணைக்கப்பட்டிருந்தன.சமத்துவத்தை நிகழ்த்திக் காட்ட நாட்டின் பன்முகப் பண்பாட்டுக் கட்டமைப்பினை அறிவதும் காரணிகள் ஒவ்வொன்றையும் தொடர்புப்படுத்தியும் விடுதலைக்கானக் கருத்துருவை அடைவதில் பெருமளவுச் சிக்கல்களைக் கொண்டிருந்தன. இருபதுக்கு முந்தைய நூற்றாண்டுகளில் எழுந்த சீர்திருத்த இயக்கங்களும் சமூக முரண்களின் கிளைகளையே அசைத்துக் கொண்டிருந்தன.

இந்தியாவில் அரசியல்பட்ட பொதுவுடைமைக் கருத்தியல் எளிய உழைக்கும் மக்களிடம் மார்க்சியத் தத்துவக் கருத்தியலோடு உலகளாவியப் பொருளியச் சிக்கல்களைக் கூட விவாதமாக்கி, கருத்தரசியலை அரசியலை மக்களிடம் வேகமாகக் கொண்டு சேர்த்தது. காலங்காலமாக மக்கள் நம்பிக்கைகளோடு பின்னிக்கிடக்கும் சனாதனப்படிநிலைச் சமூகக் கட்டமைப்புகளைத் தகர்க்க, இரசிய, பிரெஞ்சு புரட்சிகளைப் போலவே, தீர்க்கமான சமூகப் புரட்சிக்கான மாற்றுச் சிந்தனைகளை இலக்கியமாக்கினர். மக்கள் விரும்பும் கலையியலின் வழியாக முன்வைக்கிற இயக்கங்கள் புத்தொளிப் பெற்றன. இலக்கியங்களில் சமூக விடுதலைக் கருத்தியல்கள்மய்யப் பொருண்மையாயின. இலக்கியங்கள் பிரசார இயக்கங்களாகி சமூகப் பயனுறு கருவிகளாயின. இத்தகைய இருபதாம் நூற்றாண்டு அரசியல்காலச்சூழலைக் கருத்தில் கொண்டு இன்குலாப் கவிதைகளை அணுகுவது மேலதிகப் புரிதல்களுக்கு வழிகோலும்.

**இன்குலாப் கவிதை இயக்கம்**

இருபதாம் நூற்றாண்டின் அரசியலை சமூகத்தின் அறிவுத்தளத்தின் விவாதத்திற்கு எடுத்துச்சென்ற சிறப்பு தமிழ்க்கவிதை இலக்கிய வெளிக்கு உண்டு. இடதுசாரி இயக்கங்கள் கலைப்புலங்களின் வழியாக உழைக்கும் மக்களிடம் ஏற்படுத்தியக் கருத்தியல் பரப்புரைகளைத் தொடர்ந்து, பல்வேறு முற்போக்குக் கருத்தியலாரும் அவ்வழித் தலைப்படவே கலைப்புலம் அரசியல் தன்மைபெற்று எழத்தொடங்கியது. தமிழ்க் கவிதைகட்கு சமூகத்தைப் படியெடுத்தலும் அறிவுசார் மாற்றுச்சிந்தனைப் பரப்புரையும் புதிதல்ல என்றாலும் இருபதாம் நூற்றாண்டின் இலக்கியச்சூழல் கருத்தியல் வீரியமிக்கதாக, விவாதப் போக்குடன் அரசியல் இயக்கமாகவும், இலக்கியக் குழுமமாகவும், இதழ்களாகவும் இலக்கிய உலகு இயங்கிய போது இன்குலாப் எனும் விடுதலைக் குரலை பெயராகத் தாங்கி, சமூக அவலங்களை வெளிக்கொணர்ந்து, விடுதலைக் கருத்தியல்களை வலுவேற்றினார் பாவலர் இன்குலாப்.

**விரியும் எனது கவிதை வரிகளில்**
**கரியும் உன் காயங்கள்" என சமூகத்தை வாஞ்சையோடு அணுகி,**
**"போராட்டம் என் பிறப்பின் நியதி…**
**வாழ்வின் நியதி… முடிவின் நியதி…**

என்றவாறு தம் கவிதை நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்கிறார். தமிழ்ச்சமூகத்தின் கவிதை இயக்கங்களின்தலைமைப் பாத்திரத்தை இன்குலாப் தமது சமரசமற்ற மக்கள் பாடுநிலைகளாலும், மிகையற்ற சொல்லாட்சிகளாலும், நடப்பியலைக் காட்சிப்படுத்தும் தன்மையினாலும் தமதாக்கிக் கொண்டுள்ளதை அறிய முடிகிறது.

பாதிக்கப்பட்ட மக்களின் குரலாய் நின்று சமூக நிலைகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தவல்ல அரசியலின் தன்மைகளை உடைத்துப் பேசும் இன்குலாப்,

**மானுடம் கூடும் சுவரில்லாத சமவெளிதோறும்**
**மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன்**

என விடுதலைக் கருத்தியலின் மய்ய நோக்கமான மானுடச் சமத்துவத்தை வலியுறுத்தி,எல்லா அரசியல் கருத்தியல் நெறிகளுடனும் உழைக்கும் மக்களின் பிரதிநிதியாக வாதிடுகிறார். இருபதாம் நூற்றாண்டின் அறிவியக்கத்தால் சமூக மதிப்பீட்டுக் காரணிகளை ஆராயும் தன்மையதாய் இன்குலாப்பின் கவிதை இயக்கம் காண்கிறது. இடதுசாரிக் கருத்தியலுடன் போராட்ட அரசியலுக்கு உழைக்கும் மக்கள் தலைப்பட்டு வர்க்கப்புரிதலோடு ஓர்மை கொள்ள வேண்டியத் தேவை இன்குலாப்பின் கவிதை முழுக்க விரவிக் கிடக்கிறது.

**சனநாயகத்தில்விடுதலைக் கருத்தியக்கம்**

காலனிய விடுவிப்புக்குப்பின் மக்களாட்சியின் ஏமாற்றங்களில்மக்கள் வெம்பியிருந்த காலத்தில் எழுத்துலகில் பயணப்படுகிறார் இன்குலாப். காலனியத்தின் வர்க்கச் சுரண்டல்கள், பண்பாட்டு அடக்குமுறைகள், வாழ்வுரிமை மறுப்புகள் எனகாலனிய இழப்புகளுக்குப்பின் உழைக்கும் மக்களின் வாழ்நிலை காலனியத்தைக் காட்டிலும் மோசமான பிராமணிய, முதலாளியக் கட்டைமைப்புக்குள் சிக்குண்டிருப்பதை மய்யப்புள்ளியாக்கி இயக்கங் கொள்கிறது இன்குலாப்பின் கவிதைத்தளம்.

1970களில் பொருளியச் சமநிலையே மக்கள் விடுதலைஎனக் களமாடிய இன்குலாப்பின் கவிதைக் கருத்தியக்கம்,சனாதனச் சாதியப் படிநிலைச் சமூகத்தில் ஆதிக்குடிகள் தம் விடுதலையைப் பெற பொருளியச் சமநிலைக்குத் தடையாக இருக்கும் சனாதனக் காரணிகளைப் புரிந்துகொண்டு,திராவிடசுயமரியாதைக் கருத்தியலுடனும் தமிழ்த்தேசிய விடுதலைக் கருத்தியலுடனும், தலித்தியக் கருத்தியலுடனும் ஒத்திசைந்து பொருளியச் சமநிலைக்கு முன்னான பணிகளில் ஈடுபட்டார். சமூகத்தின் பொருளிய அசமத்துவப் பின்னணியில் உள்ள பிராமணியத்தின் வடிவமாக இந்தியாவில் முதலாளியம் இயங்குகின்றமையைஇன்குலாப் கவிதைகளின் நடப்பினைக் காட்டும் அடிக்குறிப்புகள் உணர்த்தி நிற்கின்றன.

**இன்குலாப் கருத்துப் புலப்பாட்டு உத்திகள்**

இன்குலாப் கவிதைக் கலையை ஓர் மக்கள் பிரச்சார இயக்கமாகக் கையாள்கிறார். உழைக்கும் மக்களின் குரலாக இலக்கியத் தளத்தினை உருவாக்க பரப்புரை செய்கிறார். மக்களின் இழிவுகளுக்கானக் காரணங்களைக் காட்சிப்படுத்தி, வெகுமக்களை சமூக

அவலங்களின் மீது கவனப்படுத்துகிறார். மாற்றத்திற்கான முன்மொழிதலைக் கவிதைவழி நிகழ்த்துகிறார்.அனுபவத்தின் ஊடாக, நடப்புகளிலிருந்தே கருக்கொள்ளும் இன்குலாப்பின் கவிதைகள் சமூக அவலங்களைமிகையற்றக் காட்சிப்படுத்தங்களால் வாசகனைக் கருத்தோடு ஒன்றித்து, வாதத்திற்கு வலுகூட்டிக் கொள்கின்றன.

சமூக மாற்றத்திற்கான முதற்காரணமாகிய நடப்பின் அநீதியான சமமற்றச்சூழலை விவரித்து சினந்துச் சாடுகிறார். களத்தின் நடப்புகளுடன் ஒன்றித்தச் சிந்தனைக்கும் செயலுக்கும் வழிநடத்தும் இன்குலாப்பின் மொழிதல் நுட்பம் வாசகனைப் புரிதலுக்கு உட்படுத்தி மாற்றத்துக்கு முன்னான கலகநிலைக்குள் செலுத்துமாறு இயக்கம் பெறுகிறது.
கலக மனநிலையை எட்டும் வாசகன் இயல்பாகவே தீர்வைப் பற்றியச் சிந்தனைகளுக்குத் தலைப்படுகிறான். முன்னை அமைப்புக்குள்ளிருந்து மாற்றம் சாத்தியமில்லை என்பதை உணரவிட்டு கலைப்பு மற்றும் மீள்கட்டுமானத்திற்கான நியாயங்களையும் வாய்ப்புகளையும் பொதுவுடைமைச் சார்புநிலையினின்று முன்வைக்கிறது இன்குலாப்பின் கவிதை இயக்கம்.

கவிதைகளின் மய்யப் பொருண்மையை ஒட்டி இன்குலாப்பின் கவிதைத் தளத்தை இரு நிலைகளில் அடையாளம் குறிக்கலாம்.

- **மறுப்பியக்கம்**
- **எதிரியக்கம்**

என இன்குலாப்பின் மொழிதலைக் கண்ணுறுகையில் கிடைக்கின்றத் தமிழ்ச் சமூகத்தின் காட்சி, காலத்தின் பலபட்டத் தன்மைகளையும், தேவைகளையும், இலக்குகளையும் தெளிவுபடுத்துகின்றன.

**மறுப்பியக்கங்கள்**

சமூகத்தில் மாற்றங்கள் இயல்பானவை, தடுத்திட இயலாது.முதலாளியச் சமூகத்தில் உழைக்கும் மக்களுக்கான சமூக மாற்றத்தை, வளர்ச்சியினை சாத்தியப்படுத்தும் செயல்பாட்டின் முதல்படியாவது அமைப்பைஏற்க மறுத்தல் எனும் எதிர்நிலையாகும்.சமூக, பொருளாதார நிலைகளில் வஞ்சிக்கப்பட்ட உழைக்கும் மக்களின் பக்கம் நின்று அவலங்களைக் கண்ணுறும் இன்குலாப், கீழ்வெண்மணி,திண்ணியம் உள்ளிட்ட எளிய மக்களின் இறுதி நம்பிக்கையான நீதித்துறையும் ஏமாற்றிய, சமகால அனுபவங்களின் ஊடாக இந்திய தேசிய அரசமைப்பின் மீதான நம்பிக்கையை இழக்கிறார். கவிதைக்கலைக்கு போர்க்கலை வடிவம் கொடுத்துவிடுதலைச் சிந்தையோடு சமகால அமைப்பினை வலுவாக மறுக்கிறார். மறுப்பிற்கானக் காரணங்களைஅவலக்காட்சிகளாக முன்வைத்து வாதிடுகிறார்.

**சனாதன முதலாளிய மறுப்பியக்கம்**

உலகளாவியப் பொருளிய ஆதிக்கத்தின் தனியுடைமைக் கொள்கைகளின் மூலத்தை நோக்கி வாசகனைக் கவனப்படுத்துகிற இன்குலாப்,

**வெள்ளைமாளிகை.!மண்ணின் மைந்தர்களின் மண்டை ஓடுகளில்…**

**பற்றி எரிந்த பாலஸ்தீனக் கூடாரங்களில்…**

**தென்னாப்பிரிக்கச் சிறைகளில்...**

**ஹிரோசிமாவில்... நாகசாகியில்...**

**ஒரு கையில் டாலரும்... மறுகையில் துப்பாக்கியுடன்...**

**வலம் வந்த வழியெல்லாம் விபசார விடுதி...**

**கரைதாண்டி உன் காமம்**

என அமெரிக்க வல்லாதிக்கத்தின் வரலாற்றைக் காட்சிக்குத் தந்து முதலாளியத் தனியுடைமை அபாயங்களை முன்வைக்கிறார். இதே காலத்தில், 1990 முதல் 1991 வரை நிகழ்ந்த அமெரிக்க வளைகுடாப் போரும், இந்தியாவின் ஒத்துழைப்பும், 1991 சூலை மாதம் தனியார்மயம் அனுமதிப்பும் ஒருசேர நிகழ்ந்தமை கவனத்துக்குரியது.

**தமிழ்ச்சமூகஎதிர்க்கருத்தியல் இயங்கு நிலைகள்**

மனுவாத இந்தியச்சமூகத்துக்குள் மதியிழந்த தமிழ்ச்சமூகத்தின் பார்ப்பனீய மனுவாதக் கோட்பாடுகளால் புராணகால மரபுகளாலும், பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகளாலும், பாதிப்புக்குள்ளான வெகுமக்களைக் காட்சிப்படுத்துகையில் இன்குலாப்பின் எழுத்தில் சினம் தெறிக்கிறது.நந்தனார் எரிப்புஎன புராண வரலாற்றையும், அறிவியல் யுகத்தில் நிகழ்ந்ததிண்ணியம்மலந்திணிப்பு, கீழ வெண்மணி கொடுங்கொலை, பாப்பாப்பட்டியின் அரசியல் சனநாயக உரிமை மறுப்புஎன,தமிழ்ச்சமூகத்தின் சாதிய மனோநிலையும், குறுங்குழு வாதங்களும், மனுவாதச் சார்பு பெற்றிருத்தலையும் சாடி,அரசமைப்பின் போதாமையைச்சுட்டிக்காட்டி கடிந்துரைக்கிறார்.

**சமய மறுப்பியக்கம்**

சாதிய இழிவுகளின் சமூக நிறுவனமாக சமயங்கள் தனது மூர்க்கத்தனமான நியமனங்களால் நவீனத்தின் அறிவியல் அடிப்படைகளை ஏற்காமல் முன்னை அடிமைத்தனங்களுக்கும் வாழ்வுரிமைத் தடைகளுக்கும் அரண் செய்வதோடு, பொருளியச் சுரண்டலின் வேர்களைப் பாதுகாக்கின்ற தன்மையைக் காட்சிப்படுத்தி சமய மறுப்பினை முன்னெடுக்கின்றன கவிதை வரிகள்.முற்போக்கு இயக்கங்களில் சமயப் பிரிவினைகளின் மீது காட்டும் தீவிரம் சாதியத்தின் எதிர்ப்பில் இல்லாமலிருந்தது. சாதியம் மென்மையாக அணுகப்பட்டு நிராகரிப்பின்றி ஏற்கப்பட்ட இயங்குத் தளத்தினை பெற்றிருந்தது. இந்நிலையில்சாதியும் மதமும் குறித்த எதிர்க்கருத்தியலை வடிவமைத்த பெரியாரின் சிந்தனைகள் இன்குலாப்பின் கவிதைகளில் மய்யங்கொண்டு இயங்கியது. கிறித்தவ, இசுலாமியரல்லாத பெரும்பான்மையான கடவுள் நம்பிகைகளை இந்து என ஒற்றை மயப்படுத்தியப் பின்னணியில் வர்க்கமாக உழைக்கும் மக்கள் அணிதிரள்வதைச் சிதைக்கும் முயற்சியாகவேப் பார்க்கும் இன்குலாப்,

**“மதம் வேண்டாம் – நல்ல மனம் தான் வேண்டும்”**

**“வானரப் படையாய் இலங்கையில் மடிந்தாய்,**

**வரலாறு நெடுக உன்னை இழந்தாய்”**

என மதவாத அரசியலில் தமிழ்ச்சமூக நிலையைக் கடிகிறார்.நிலவுடைமைச் சமுதாயக் கழிவுகளான மனுவாத சாதியக் கட்டமைப்பை வலுப்பெறச் செய்வதன் வாயிலாக பொருளிய ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சிக்கும்சக்திகளின் செயற்களனாக சாத்திரங்களில் தன்னிலை இழந்த தமிழ்ச்சமூகத்திற்கு, அதன் வரலாற்றை நினைவுறுத்திசமகால அசமத்துவ அமைப்பை மறுக்கின்றன இன்குலாப்பின் வரிகள்.

**இன்குலாப் கவிதையில் விடுதலைக் கருத்தியல்கள்**

இருபதாம் நூற்றாண்டு தமிழ்ச்சமூகத்தின் இயக்கங்களின் தன்மை கழிவிரக்க மனோநிலையினின்று நீங்கி எழுச்சிமிகு எதிர்ப்பியக்கத்தின் வாயிலாக தமிழ்ச்சமூகம் அடைந்திருக்கும் கருத்தியல்சார்அரசியல் தளங்கள் கவனத்துக்குரியன. அவ்வ நோக்கினால் மறுத்தும், கலகம் செய்தும், அமைப்பைக் கலைத்துப் புனரமைத்திடும் நோக்குடன் களமாடிய விடுதலைக் கருத்தியல் இயக்கங்களைக் காட்சிப்படுத்தி நிற்கின்றன இன்குலாப் கவிதைகள்.

**பெரியாரிய விடுதலைக் கருத்தியல்**

தமிழ்ச்சமூகத்தின் சாதிய இழிவுகளுக்குக் காரணமான யாதொன்றையும் சமரசமின்றி எதிர்த்த எதிர்ப்பியக்கமே பெரியாரியம். பெரியாரியக் கருத்தியல் கடவுள் முதலான எல்லா அடிப்படைக் கட்டுமானங்களையும் புனிதங்களையும் கேள்விக்கு உட்படுத்தி அறிவின் சார்புகொண்டு அம்பலப்படுத்தியது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ச்சமூகம் கண்ட மாபெரும் எழுச்சியானபெரியாரிய இயக்கத்தின் தன்மைகளை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக் கொண்டு விடுதலைக் கருத்தியலாக முன்மொழிகின்றன இன்குலாப் கவிதைகள். மேலும், பெரியாரியச் சிந்தனைகளின்பால் விடுதலைக் கருத்தியக்கங்கள் ஓர்மைப்படுவதற்கான அறைகூவலையும் முன்வைக்கின்றார் இன்குலாப்.

**நால்வருணம் மனிதரைப் பிரிக்கும் - எம்**
**பெரியாரியம் கறையை வெளுக்கும்**

இந்தியச் சமூகத்தின் பொருளிய அடிமைத்தனங்களுக்கு பின்னணியில் மனுவாதச் சாதியக் கட்டமைப்பும் அதனைப் பாதுகாக்கும் பிராமணியச் சமயக் கட்டமைப்பும் இயங்குவதை நுட்பமாகக் கண்டறிந்த பெரியார், இந்தியாவில் நிலவுவது சனாதனிய முதலாளியம் என்பதை முன்குறித்துக் களம் கண்டார். பெரியாரின் கருத்தியலுடன் சற்றும் முரண்படாமல் ஒத்திசைந்து பயணிக்கிற இன்குலாப், பெரியாரின் கருத்தினின்று விலகி அதிகாரத்தை எளிய மக்களுக்கு எதிராகப் பயன்படுத்திய திராவிடக் கட்சிகளின் எதேச்சதிகார நிலையைக் கடுமையாக விமர்சித்தும் நிற்கிறார்.

**மார்க்சிய விடுதலைக் கருத்தியல்**

மார்க்சின் தத்துவங்களை வியந்தோதும் இன்குலாப் உலகளாவிய மானுட ஒன்றுகூட்டலுக்கானத் தீர்வாக மார்க்சியக் கருத்தியலை முன்னிறுத்துகிறார். மார்க்சியமே மக்கள் விடுதலைக்கான இறுதித் தீர்வு என்ற முன்வைப்புகளுடன், தமிழ்ச்சமூகத்தில் மார்க்சிய இயக்கங்களின் களப்பணிகளிலும் களமாடிய இன்குலாப், தொழிலாளர் நலன்களைப்

பாதுகாக்கப் பொருளியச் சிந்தனையிலான வர்க்க ஒருங்கிணைப்பின் அவசியத்தை உணர்த்துகிறார். இன்குலாப் சமகால நடப்புகளில் பொதுவுடைமை இயக்கத்தின் போதாமையையும், வீரியமற்றத் தன்மையையும் சாடாமலும் இல்லை. முரணற்று இயங்குகிற எந்தக் கருத்தும் புனிதப்பட்டு கெடுவதே வரலாறு. ஆக, முரண்படுதலும் விமர்சித்து நெறிப்படுவதும் பொதுவுடைமைக் கருத்தியலின் சிறந்தத் தன்மையாகக் கொள்ளலாம். அவ்விதமாகவே இன்குலாப்பின் இடதுசாரி இயக்க முரண்களை அணுகிட முடிகிறது.வியட்நாம் புரட்சிவெற்றியிலும், மே தினம் குறித்த வருணிப்புகளிலும்,வெண்மணி சாட்சியங்களிலும் இடது இயக்கத்தின் மீதான உறுதியான நம்பிக்கையைப் புலப்படுத்தி நிற்கிறார் இன்குலாப். குறிப்பாக பொதுவுடைமைக் கருத்தியலாரின் மாறுபட்ட அல்லது குழப்பமான முடிவுகளையும்கடுமையாக விமர்சித்து நிற்கிறார்.

**தலித்திய விடுதலைக் கருத்தியல்**

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைகளை மீட்டெடுத்து கல்வி, வேலை உள்ளிட்ட உரிமைகளால் வாழ்வை நிலைப்படுத்துகின்ற அரசியல் அணியமாக்கும் கருத்துருவே தலித்தியக் கருத்தியல். இந்தியத் தேசியத்திற்குள் மறுக்கப்பட்ட உரிமைகளைச் சட்டரீதியாகப் போராடிப் பெற்று சாதி, மத, இன, மொழி பிரிவினைகளால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் துணைநிற்கும் இயக்கமாக தலித்திய கருத்தியலைக் காட்சிப்படுத்துகிறார் இன்குலாப்.

**கூடுகளில் புதிய சிறகுகள் முளைக்கின்றன...**
**மனுநூல் எம்மை அடிமைப்படுத்தும்**
**அம்பேத்கரியம் எம்மை விடுதலை செய்யும்**

என உறுதியாகக் கட்டியங்கூறும் இன்குலாப், தலித்திய விடுதலைக் கருத்தியல் மீது கொண்ட நம்பிக்கையைக் காண முடிகிறது. உழைக்கும் மக்களான ஒடுக்கப்பட்ட தொல்குடி மக்கள் அணியமாதலும் அதிகாரமடைதலுக்குமானத் தேவையை தலித்தியக் கருத்தியல் தளத்திலிருந்தே இன்குலாப் முன்வைக்கிறார்.

**பெண்ணிய விடுதலைக் கருத்தியல்**

மனித சமூகத்திலேயே ஒடுக்கப்பட்ட இனங்களில் பெண்களின் நிலை மாறுபட்டத் தன்மைகளைக் கொண்டதாகும். எல்லா நிலைகளிலும் கீழ்ப்பட்டு உலகின் எல்லா வகை அடக்குமுறைகளுக்கும் ஆட்பட்ட, ஆட்படுகிற பெண்களின் நிலை குறித்த மாற்றுச் சிந்தனை தமிழ்ச்சமூகத்தில் வீரியமாக இயக்கம் கண்டிருந்தாலும் சாதிய, மத, கலாச்சாரக் கட்டுகளை உடைத்து பெண் மீட்சி காண்பதில் பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்து வருகின்றன.

**சமையல் அறையில் மண்டும் புகையில்**
**சபம்பிய வேர்வை மலர்க் குலமோ...**
**எத்தனை காலம் இக்கூண்டுக்குள்ளே...**
**வளைக் கரங்கள் இனி ஆயுதக்கரங்கள் ஆகட்டும்**

பெண்ணின விடுதலைக்கானச் சிக்கல்களை எதிர்கொள்ள பெண்களே முன்னின்று களமாட வேண்டும் என்றும், தமக்கான விடுதலையைத் தாமே தீர்மானிக்க பெண்கள் அரசியல் களமாடிட வலியுறுத்துகின்றன இன்குலாப் கவிதைகள்.

**சனாதன எதிர்ப்பில்திராவிடக் கருத்தியல்**

பொருளிய ஆதிக்க மனோநிலையுடன் பார்ப்பனியக் கூட்டமைப்பாகவே மாறிப்போன காங்கிரஸ் இயக்கத்தினின்று நீங்கி, எழுந்த நீதிக்கட்சியின் நீட்சியாகவும்,சமரசமற்ற எதிரெழுச்சியுடனும் களம்கண்ட பெரியாரின் பார்ப்பனீய எதிர்க்கருத்தியலே திராவிடம் ஆகும். பெரியாரின் சமூகநீதி இயக்கச் சிந்தனைகளுக்கு அரசியல் அதிகாரமடைந்து செயல்வடிவம் தரும் முகமாக அண்ணாத்துரை தலைமையில் தேர்தல் அரசியல் களப்பட்ட திராவிட இயக்கம் தன் நோக்கத்தினின்று மாறுபட்டு சாதிய அரசியல் மயப்பட்டும், முகத்துதி விளம்பர அரசியலுக்கு ஆட்பட்டும் இயங்கியபோது,

**மனக்குகையில் எழுந்த சிறுத்தை**
**சிறை வைக்கப்பட்டது**

என்றும்,

**உயர்த்தப் பட்ட கருமை**
**நயவஞ்சகத்தின் திரையாகிவிட்டது**

எனவும்,கடுமையான விமர்சனங்களைத் தொடுக்கும் இன்குலாப், கீழ் வெண்மணிபோன்ற நிகழ்வுகளிலும் தமிழீழ நிலைப்பாடுகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்பாடுகளைக் கடுமையாக எதிர்த்தியங்கும் இன்குலாப் கவிதைகள், கருணாநிதி, இராமச்சந்திரன், ஜெயலலிதா ஆகியோரின் மீதான விமர்சனங்கள் கருத்தியல் சார்பற்ற, முகத்துதி அரசியலின் கேடுகளைக் காட்சிக்குத் தருகின்றன. புரிதலில்லா தலைமையமைந்தால் எத்தகைய விடுதலைக் கருத்தியலும் சாரமற்றுப் போகும் என்பதை இன்குலாப்பின் வரிகள் வலியுறுத்தி நிற்கின்றன.

**தொகுப்புரை**

இன்குலாப்பின் தனி மனித கவிதை இயக்கம் மக்களை மய்யமிட்டதாக அமைந்திருக்கிறது. உழைக்கும் மக்களின் மீதான அனைத்து அடிமைத்தனங்களும் தீர்வுகளைத் தேடும் முயற்சியாகவே இன்குலாப் கவிதை இயக்கம் கண்டுள்ளது. உழைக்கும் மக்களின் விடுதலை ஒன்றே இலக்காகக் கொண்டிருந்த இன்குலாப், எழுத்துலகத் தொடக்கத்தில் மார்க்சியக் கருத்தியேலோடும், பின்னர் பெரியாரியக் கருத்தியலோடும், தலித்தியக் கருத்தியலோடும் பயணிக்கின்றமையைக் காணமுடிகிறது. மக்களின் விடுதலையை பொருளியச் சமநிலைப் பார்வையில் அணுகும் மார்க்சியமும், சுயமரியாதைப் பார்வையில் அணுகும் பெரியாரியமும், சமூகநீதிப் பார்வையில் அணுகும் தலித்திய, பெண்ணிய கருத்தியல்களும் கருத்தியல் ஓர்மை கொள்ள வேண்டும் என்கிற இன்குலாப்பின் அறைகூவல் கவிதைகளில் வெளிப்படுகிறது. சமகால நடப்புகளிலிருந்து வரலாற்றையும், வரலாற்றின்

தடயங்களிலிருந்து படிப்பினைகளையும் வலியுறுத்தி, மாற்றத்திற்கானக் கருத்தரசியல் தேவையை மய்யமாக்கி செயல்பட்டுள்ள இன்குலாப், தமது விடுதலை நோக்கிற்கு முற்போக்குக் கருத்தியல்களை வலுவேற்றி இயங்கியமைப் புலனாகிறது. தமிழ் இலக்கிய வெளிக்கு அமைப்பிலும் உள்ளடக்கத்திலும் எடுத்தோது நிலையிலும் சொல் தோரணங்கள் இன்றியும் புதிய உச்சங்கங்களைத் காட்டி இயக்கம் கண்டுள்ளமைத் தெளிவு. இன்குலாப் எதிர்கால இலக்கிய வெளி பயணிக்க வேண்டிய திசையினையும் தேவையையும் கவிதைகளூடாக வெளிப்படுத்தியும் ஆற்றுப்படுத்தியுள்ளார். உழைக்கும் மக்கள் சமத்துவம் எய்துவதும், இந்திய சனாதனிய முதலாளியக் கூறுகளின் நாகரீக வளர்ச்சிப் பரிணமிப்புகளையும் காட்சிப்படுத்தியுள்ள இன்குலாப்பின் கவிதைகள் தமிழ்ச் சமூகத்தின் விடுதலைக் கருத்தியல்களின் தொகுப்பாகவும் பிரதிநிதியாகவும் வெளிப்படுகிறது என்பதே இக்கட்டுரையின் வழி புலப்பட்டுள்ளது.

**குறிப்புகள்**

[1] *ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்.* இன்குலாப் 2017, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்.

[2] *நவீனத் தமிழ்க் கவிதையின் போக்குகள்.* கரிகாலன் 2005, மருதா பதிப்பகம், புதுவை.

[3] *புதியக் கவிதைகளில் மார்க்சியம்.* ஆ.செகந்நாதன் 1983, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[4] *கவிதையின் உயிர் உடல் உள்ளம்.* க.ப.அறவாணன் 1977, பாரி நிலையம், சென்னை.

[5] *சமூகவியலும் இலக்கியமும்.* க.கைலாசபதி 1979, நியூ செஞ்சுரி புக்ஸ், சென்னை.

[6] *கலை இலக்கியம் ஓர் தத்துவப் பார்வை.* ஞானி 1975, வேள்வி வெளியீடு, கோவை.

[7] *மார்க்சிய சமூகவியல் கொள்கை.* நா.வானமாமலை 1976, நியூ செஞ்சுரி புக்ஸ். சென்னை.

[8] *புதுக்கவிதை புதுப்பார்வை.* பாலா 1999, அகரம் வெளியீடு, சென்னை.

[9] *புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம் .* இரா.சம்பத் 1992, உமா பதிப்பகம், புதுவை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.